**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 4 of 2024

Depositions of PW - 2 witness for ________ { Prosecution / Defence / Court

Name : ஆனந்தன்

Father's Name : த/பெ. சுப்ரமணி

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th **day of November** 2024.

**(அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது நல்லூர்பாளையத்தில் வசித்து காட்டு வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரி மற்றும் புகார்தாரர் சுப்பாள் ஆகியோர் என்னுடைய ஊரை சேர்ந்தவர் என்பதால் எனக்கு தெரியும்.

2. தேதி, மாதம் தெரியாது. சுமார் 1 வருடத்திற்கு முன்னர் காலை 8 லிருந்து 08.30 மணியளவில் நான் எதிரியின் தோட்டத்திற்கு அருகில் உள்ள ராசுகவுண்டர் என்பபருடைய டீகடைக்கு டீ குடிக்க சென்றபோது ஆஜர் எதிரி வடக்கு திசையிலிருந்து வந்தார். அவருடைய தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக கேட் வால்வை திறந்துவிட்டு

விட்டு சென்றார். நான் தோட்டத்திற்கு செல்வதாக கூறிவிட்டு சென்றுவிட்டு திரும்பி வந்தபோது டீ கடை அருகே கூட்டமாக இருந்தது. என்ன வென்று கேட்டதற்கு சுந்தரம்மாள் வழுக்கி விட்டு விழுந்துவிட்டதாக கூறினார்கள்.

3. நான் காட்டுக்கு போயிவிட்டு டிராக்டர் எடுத்துவிட்டு வந்தேன். சுந்தரம்மாள் கை, கால்களில் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் இருக்கும் விபரம் எனக்கு சாய்ந்தரம் தான் தெரியவந்தது. நான் வேலைக்கு சென்றுவிட்டதால் வழக்கு குறித்த விபரம் எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்குமாறு கோரியதன் பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 13.06.2023ம் தேதி காலை 08.30 மணிக்கு நான் எங்கள் ஊரில் உள்ள ராசுகவுண்டர் டீ கடையில் டீ குடித்து விட்டு வேலைக்கு செல்வதற்காக வந்தபோது ஆஜர் எதிரி புகார்தாரர் சுப்பம்மாளின் மகனிடம் கொடுத்த பணத்தை திரும்பி கேட்டார் என்றும், அப்போது புகார்தாரர் தன் மகனிடமே கேட்குமாறு எதிரியிடம் கூறினார் என்றும், அதை கேட்ட எதிரி புகார்தாரரை கெட்டவார்த்தைகளால் பேசி வலது கையில் மணிக்கட்டை பிடித்து முறுக்கி கீழே தள்ளினார் என்றும், புகார்தாரின் சத்தம் கேட்டு நான் அருகில் செல்லவே ஆஜர் எதிரி அவரை கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், அதை நான் நேரில் பார்த்தேன் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

G RUBANA
Digitally signed by G RUBANA
Date: 2024.11.16 16:41:23 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**

**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 4 of 2024 |

Depositions of PW - 3 witness for ________ { Prosecution / Defence / Court

Name : நவீன்குமார்

Father's Name : த/பெ. ரங்கசாமி

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th **day of November** 2024.

**(அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது நல்லூர்பாளையத்தில் வசித்து லோடு ஏற்றும் வேலை பார்த்து வருகிறேன். புகார்தாரர் சுப்பாள் என்னுடைய பாட்டி ஆவார்.

2. தேதி, மாதம் தெரியாது. சுமார் 4, 5 மாதங்களுக்கு முன்னர் காலை 08.30 மணியளவில் நான் கடைக்கு போயிவிட்டு வீட்டிற்கு வந்து கொண்டிருநதபோது என்னுடைய பாட்டி அழுது கொண்டிருந்தார். கையை முறுக்கிவிட்டதாக கூறினார். மோகன் ராஜ் கையை முறுக்கி விட்டதாக கூறினார். கேஷ் கொடுக்கலாம் என்று பாட்டி கூறினார். ஸ்டேசனுக்கு போனபோது மருத்துவமனைக்கு போகுமாறு கூறியதன் பேரில் பல்லடம் அரசு

மருத்துவமனைக்கு சென்றோம்.

3. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் பார்வைமகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதாகும். தேதி, மாதம் மறந்துவிட்டது. கையொப்பத்தை எங்கு வைத்து செய்து கொடுத்தேன் என்று மறந்துவிட்டது. பாட்டியை அடித்ததற்காக கையொப்பம் செய்து கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்குமாறு கோரியதன் பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 14.06.2023 ம் தேதி காலை 10.30 மணிக்கு நானும் என் அண்ணன் சபரியும் ராசுகவுண்டர் டீ கடை அருகே வந்தபோது அங்கிருந்த போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதற்கு சாட்சியாக கையொப்பம் செய்து விட்டு தற்போது பாட்டி கேட்டு கொண்டதற்காக கையொப்பம் செய்தேன் என்று மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

G RUBANA
Digitally signed by G RUBANA
Date: 2024.11.16 16:41:30 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**